**தலைப்பு 233 – அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 233 – அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜுலை 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் உள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானம் அல்லாத பெறுவனவு**

நிதிக்கூறறுக்களிற்குரிய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடு அவதானிக்கப்பட்டது.

.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பௌதீக சொத்து விற்பனையால் கிடைத்த ரூபா 276,755 தொகை, காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளால் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்து விற்பனையால் கிடைத்த வருமானமாக காட்ட வேண்டிய போதும், செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் ஏனை வருமான தலைப்பிற்காக சேர்க்கப்பட்ட வருமானத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | பௌதீக சொத்து விற்பனை வருமானத்தை செயற்பாட்டு நடவடிக்கைகளின் ஏனைய வருமானத் தலைப்பில் குறிப்பிட்டுள்ளதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் இவ்வருமானத்தை முதலீட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் குறிப்பிட நடடிவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான முறைப்படி காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்க வேண்டும். |

**(ஆ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 திகதியன்று நிதியல்லா சொத்துக்கள் மீதான கூற்றில் (ACA 6) குறிப்பிடப்படும் பயணிகள் வாகனங்களின் பெறுமதி ரூபா 18,654,796 ஆனதுடன், அதனை 2022 சனவரி 01 திகதிக்கு ரூபா 90,026,796 ஆக SA 82 அறிக்கையில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. இவ் வித்தியாசத்திற்கான காரணத்தை நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்கள் ஊடாக தெளிவாக காட்டியிருக்கவில்லை. | இவ் வித்தியாசத்திற்கு காரணத்தை 2022 மே மாதத்தில் கணக்கீடு செய்யப்பட்ட திணைக்களத்திற்கு 2017, 2018, 2019 மற்றும் 2021 ஆண்டுகளிற்குரிய ரூபா 71,372,000 பெறுமதியான 11 வாகனங்களின் பெறுமதியை CIGAS கனணி நிகழ்சித் திட்டத்தில் ஆரம்ப மீதிக்கு சேர்க்கப்படலாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இவ் வித்தியாசத்திற்கு காரணத்தை நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் தெளிவாக காட்ட வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது மாதிரி பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) சேதங்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 110 பிரகாரம் சேதகள் தொடர்பான பதிவேட்டை நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. | சேதங்கள் மற்றும் நட்ட பதிவேட்டை நாளாதுவரையாக்கியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சேதங்கள் மற்றும் நட்ட பதிவேடொன்றை நாளாதுவரையாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) வாகன சம்பவக் குறிப்புப் புத்தகம் | | |
| நிதிப் பிரமாணம் 1645 (அ) பிரகாரம் வாகன சம்பவக் குறிப்புப் புத்தகத்தை நாளாதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை. | வாகன சம்பவக் குறிப்புப் புத்தகங்களை நாளாதுவரையாக்கியதுடன் அதனை தொடர்ந்து பேணிச் செல்லுமாறு போக்குவரத்து அலுவலரை அறவூட்டியதாக அறவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்புப் புத்தக்ஙகளை நாளாதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |

**(ஈ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | விபத்திற்குள்ளான இரண்டு வாகனங்களிற்குரிய கடிதக் கோவைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | இவ்வாகனங்களிற்கு இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பாக நி.பி. 104 பிரகாரம் விசாரணை நடாத்த கடிதக் கோவைகள் ஆரம்பிக்கப்பட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட்டதுடன், கணக்காய்வு சந்தர்ப்பத்தின் போது அவ் விசாரணை முடிவடைந்து இருக்காத காரணத்தால் அக் கடிதக் கோவைகள் விசாரணை அலுவலர்களின் பொறுப்பில் இருந்ததால் கடிதக் கோவைகளை கணக்காய்விற்கு சமர்பிக்க முடியாது போனதாகவும் அவ் விசாரணையை விரைவில் முடிவுறுத்தி கடிதக் கோவையை ஒப்படைக்குமாறு விசாரணை அலுவலர்களிற்கு அறவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு தேவையான கடிதக் கோவைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2003 பெப்ரவரி மாதம் திணைக்களத்தில் இடம்பெற்ற தீயினால் ஏற்பட்ட ரூபா 2,229,111 ஆன நட்டத்திற்குரிய கடிதக் கோவை கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | 2013 ஆண்டில் திணைக்களம் டொரின்டன் சதுக்கத்தில் இருந்த பழைய கட்டிடத்தில் இருந்து பத்தரமுள்ள புதிய கட்டிடத் தொகுதிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதனால் இதற்கு தொடர்பான கடிதக் கோவையை இதுவரை தேடிக் கொள்ள முடியாததால் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த கடிதக் கோவையை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 மற்றும் 2022 ஏப்ரல் 26 திகதிய அரச செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கையின் 03(xvii) பிரவின் பிரகாரம் ஆண்டினுள் | திணைக்களத்திலுள்ள 10 ஆய்வுகூடங்களில் பேணிச் செல்ல தேவையான மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகள் மாத்திரம் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடுவதற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் சேமிப்பு காணப்படின், சம்பிரதாயமாக மேற்கொள்வதனை போன்று அதனை ஆண்டு முடிவடைய முன்னர் ஏனைய செலவினங்களிற்கு பயன்படுத்தக் கூடாத போதும், மீனாய்வாண்டில் 5 செலவின விடயங்களிற்காக வழங்கியிருந்த ஏற்பாட்டிற்கு மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் வேறு நோக்கத்திற்காக ஒதுக்கிய ரூபா 19,200,000 ஆன ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தன. செலவின விடயங்களிற்கிடையில் அவ்வாறு மாற்றுவதன் சதவீதம் 13 முதல் 333 இடையிலான வீச்சளவை கொண்டிருந்தது. அவ்வாறே நிதிப் பிரமாணம் 66 மாற்றலின் கீழ் பெற்றுக் கொண்ட ஏற்பாடுகளில் 3 செலவு விடயங்களில் 24 சதவீதம் முதல் 68 வரை சேமிப்பு காணப்பட்டது. | நிலவுகின்ற நிலைமையில் மதிப்பிட்ட போதும், அதற்காக ஒதுக்கிய ஏற்பாடுகளிலிருந்து நடவடிக்கைகளை முகாமை செய்து கொள்ள முடியாததன் மீது நிதிப் பிரமாணம் 66 ஊடாக ஏற்பாட்டை பெற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மூலதன செலவு விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 5,000,000 ஆன மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டு இருந்தது. | கொய்கா இலங்கை கருத்திட்டத்தினால் மேற்கொள்ள இருந்த செலவுகளை கணக்கீடு செய்ய ஏற்பாட்டை பெற்றுக் கொண்ட போதும், ஆண்டினுள் எதிர்பார்த்த பணிகளை மேற்கொள்ள முடியாது போனதில் அத் தொகை சேமிக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உரிய ஆய்வொன்றுடன் மதிப்பீடுகளை தயாரிக்க பொறுப்பேற்க வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் மீயாய்வாண்டிற்குரியதாக கூட்டுத் தொகை ரூபா 613,874 ஆன பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்டிருக்காததுடன், நிதிப் பிரமானம் 94 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு முரணாக இலக்கம் 233-1-1-2103 மூலதன செலவு விடயத்திற்குரியதாக ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 1,733,847 ஆன பொறுப்புக்களிற்கு உட்பட்டிருந்தது. | குறித்த செலவுகள் நி.பி. 94(1) பிரகாரம் மேற்கொள்ள வருடாந்த மதிப்பீடு போதாமல் இருந்தது. திணைக்கள அன்றாட கடமைகளை பேணிச் செல்ல மேற்கொள்ள வேண்டிய இச் செலவுகளிற்கு உட்படலை பிற்போட முடியாததால் நி.பி 94(2) பிரகாரம் இப் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்பட வேண்டி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி அச்சுக் குறிப்பு பிரகாரம் கடப்பாடு மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 77,378,279 ஆன போதும் நிதிக்கூற்றில் இணைப்பு (iii) மற்றும் (iv) கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 114,113,636 ஆக ரூபா 36,735,357 தொகை கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | சிகாஸ் கனணி நிகழ்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள கடப்பாடு மற்றும் பொறுப்புக்களை விட ரூபா 36,735,357 இற்காக பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்பட்டுள்ளதாக ஏற்றுக் கொள்வதுடன், அவ்வாறு கடப்பாடு மற்றும் பொறுப்புக்களிற்கு நி.பி 94(2) இல் காணப்படும் ஏற்பாடுகளின் மீது உட்பட்டதாகவும், வருடாந்த ஏற்பாடு போதததன் மீது சிகாஸ் கனணி நிகழ்சித் திட்டத்திற்கு இந்த ரூபா 36,735,357 இனை உட்படுத்த முடியாது போனதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த பொறுப்பேற்க வேண்டும். |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வை மேற்கொண்டு அதன் பிரகாரம் தொகுதி ஆக்கபூரமாக பேணிச் செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்வதாக, இம் மீளாய்வுகளை ஆவண ரீதியாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் | 2022 ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வு திட்டமொன்றை தயாரித்து அதனை 2022 சனவரி 20 திகதி சமர்பித்துள்ள போதும் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் பதிற் கடமை அடிப்படையில் இருந்த போதும் நிரந்தமான ஒருவர் இல்லாததால் திட்டம் பிரகாரம் நடவடிக்கை இடம் பெறவில்லை. 2022 ஆண்டு நவம்பர் மாத்திலிருந்து பதிற் கடமை அடிப்படையிளேனும் உள்ளக கணக்காய்வளர் ஒருவர் திணைக்களத்தில் இல்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும், அவ்வாறான மீளாய்வுகளை மேற்கொண்டதற்காக கூற்று கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | | |

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

மாதிரி கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுத்தாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டம், விதி, பிரமாணம் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை** | | | |
| | **XV** ஆம் அத்தியாயத்தின் 10.3 பிரிவு | அரச உத்தியோகத்தர் ஒருவர் நாட்டிலிருந்து வெளிச் செல்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்பத்திரம், குறைந்த பட்சம் அலுவலர் வெளிச் செல்லுவதற்கு பத்து நாட்களிற்கு முன்னர் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள உரிய அமைச்சரிற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், திணைக்களத்தின் மூன்று அலவலர்களின் விண்ணப்பங்கள் அவ் அலுவலர்கள் நாட்டிலிருந்து வெளிச் சென்றதன் பின்னர் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | இந்தியா அரசின் மூலம் வழங்கப்படும் ITEC பயிற்சி பாடநெறிக்காக அழைப்பிதழ் கடிதம் (Invitation Letter) பொதுவாக விடுவிக்கப்படுவது வெளிநாடு செல்வதற்கு உரிய திகதிற்கு இரண்டு நாட்களிற்கு முன்னராகும். அதனால் வெளிநாட்டு விடுமுறை பெற்றுக் கொள்வதற்காக பின்னிணைப்பு – 16 இனை பூர்த்தி செய்து முறையாக மதிப்பிற்குரிய அமைச்சரிற்கு சமர்ப்பிக்க தாமதமாகியதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |

| | | | |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 104(4) | WPNA 9276 கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பான விசாரணை ஒன்றை நடாத்த குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுத்ததுடன், இதன் பின்னர் விபத்தொன்று ஏற்பட்வுடனே அது தொடர்பாக விசாரணைக் குழுவொன்றை நியமித்து 03 மாதங்களினுள் பூரண அறிக்கையொன்றை சமர்பித்து நடவடிக்கையை முடிவுறுத்த குறித்துக் கொண்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| நிதிப் பிரமாணம் 1646 | திணைக்களத்திற்கு சொந்தமான 18 வாகனங்களிற்காக ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கையை 2023 மே மாதம் முதல் முறையாக கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(iii)** **சனாதிபதி செயலக சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 2010 ஜுலை மாதம் 09 திகதிய இலக்கம் CA/1/1/16/1 மற்றும் 1993/12/31 திகதிய இலக்கம் பீபீஏ/6/1/1 கொண்ட சுற்றறிக்கை | அரச உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயணத்தில் ஈடுபட்டு இலங்கைக்கு வந்து ஏழு நாட்களினுள் சுற்றறிக்கையின் இணைப்புப் படிவம் பிரகாரம் அறிக்கையொன்றை வெளிநாட்டு பயணத்தை அங்கிகரித்த அதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், இரண்டு உத்தியோகத்தர்களினால் சுற்றறிக்கை பிரகாரம் அவ்வாறான அறிக்கையொன்றை சமர்ப்பித்திருக்கவில்லை. | குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அலவலர் அறிவூட்டப்பட்டதாகவும், இதன் பின்னர் பயிற்சி ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் இவ் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அறிவிக்க குறித்துக் கொண்டதாகவும், அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(iv)** **பொது நிருவாக சுற்றறிக்கை**

2016 திசெம்பர் 29

| | | | |
|---|---|---|---|
| ஆம் இலக்கம் கொண்ட சுற்றிக்கை திகதிய 30/2016 | | | |
| 5.1 பந்தி | எரிபொருள் அளவு மற்றும் ஓட்டத்தில் ஈடுபட்ட தூரத்தின் அளவை லொக் குறிப்பு புத்தகத்தில் தினந்தோரும் உள்ளடக்க வேண்டிய பொதும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எரிபொருள் அளவு மற்றும் ஓட்டத்தில் ஈடுபட்ட தூரத்தின் அளவைத் தினந்தோரும் ஓட்ட குறிப்பு புத்தகத்தில் உள்ளடக்குவதுடன், வாகன லொக் புத்தகத்தின் உள்ளடக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 3.1 பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்கு பின்னர் 12 மாத கால எல்லையின் பின் அல்லது என்ஜின் தொடர்பான பிரதான திருத்தமொன்றிற்குப் பின்னர் அல்லது ஆகிய விடயங்களிற்கு இடையில் முதலாவதாக ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ள வேண்டிய பொதும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2020/2021 ஆண்டுகளில் நிலவிய தொற்று நோய் பரவல் மீது அலுவலகம் மூடப்படட்மை, அலுவலர்களை சேவைக்கு அழைப்பிக்காமை மீது போன்ற 2022 ஆண்டின் நிலவிய எரிபொருள் நெருக்கடி காரணத்தால் எரிபொருள் பரிசோதனையை உரிய திகதியில் நடாத்த முடியாமல் போனது. அவ்வாறாயினும், 2022 ஆண்டில் 08 வாகனங்களிற்காக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் , 2023 ஆண்டின் அனைத்து வாகனங்களிற்காக (24) எரிபொருள் பரிசோதனை தற்போது மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(v) அரச பெறுகைகள் வழிகாட்டி கோவை 2006**

| | | | |
|---|---|---|---|
| (4)(2) பிரிவு மற்றும் 4(2)(2) பந்தி | வழிகாட்டி கோவையின் படி பிரதான பெறுகைகள் திட்டம் மற்றும் விரிவான பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்துள்ள போதும் 03 ஆண்டுகளிற்காக பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்கவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரிவுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் இலக்கம் 01/2020 இன் 9.1 (ஆ) மற்றும் நிதிப்பிரமாணம் 371(5) பிரகாரம் உப கட்டு நிதி விநியோகித்ததன் பின்னர் குறித்த பணியை முடிவுறுத்தி 10 நாட்களினுள் அந்த உபகட்டு நிதியை மீண்டும் தீர்க்க வேண்டிய போதும், அரசாங்க இரசாயணப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் அலுவலர்களினால் 11 சந்தர்பங்களில் பெற்றுக் கொண்டிருந்த ரூபா 329,500 ஆன உப கட்டுநிதியை தீர்க்க 21 நாட்கள் முதல் 157 நாட்கள் வரையான கால வீச்சளவை எடுத்திருந்தது. | முற்பணம் பெற்றுக் கொண்ட பின்னர் மீண்டும் முற்பண பட்டியல்களை தீர்த்தல் தாமதித்துள்ளதாக ஏற்றுக் கொள்வதாகவும், அந் நடவடிக்கைகளை பின்னூட்டல் செய்து உரியவாறு மேற்கொளள உரிய பிரிவை அறிவூட்டியுள்ளதுடன், 2023 ஆண்டினுள் உரிய கால எல்லையினுள் உப கட்டுநிதிகளை தீர்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் உரிய காலத்தினுள் அந்த கட்டுநிதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | குறித்த செலவை உரியவாறு மதிப்பிடாது முற்பணத் தொகையை பெற்றுக் கொண்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பெற்றுக் கொண்ட தொகை மற்றும் செலவிட்ட தொகைக்கிடையில், 35 சதவீதம் முதல் 66 சதவீதமான வீச்சளவில் சேமிப்பு காணப்பட்டது. | முற்பணம் பெற்றுக் கொண்ட பின்னர் மீண்டும் முற்பண பட்டியல்களை தீர்த்தல் தாமதித்துள்ளதாக ஏற்றுக் கொள்வதுடன், அந் நடவடிக்கைகளை பின்னூட்டல் செய்து உரியவாறு மேற்கொளள உரிய பிரிவை அறிவூட்டியுள்ளதுடன், 2023 ஆண்டினுள் உரிய கால எல்லையினுள் உப கட்டுநிதிகளை தீர்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டத்தை மூலதன செலவினத்தை மேற்கொள்ள மாத்திரம் தயாரித்திருந்ததுடன், நிறுவனத்தின் பிரதான பணிகளை மேற்கொள்ளல் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகளை மேற்கொள்ளல் தொடர்பான செயற்பாடுகளை செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கி இருக்கவில்லை. | ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தை மூலதன செலவினத்தை மேற்கொள்ள மாத்திரம் தயாரித்ததாக ஏற்றுக் கொள்வதுடன், எதிர் வரும் ஆண்டிற்காக செயல் நடவடிகை திட்டத்தை தயாரிக்கும் போது மீண்டெழும் செலவித்தையும், உள்ளடக்கி செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்தையும் உள்ளடங்கும் வகையில் செயல் நடவடிகை திட்டத்தை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 03 பந்தியின் வழிகாட்டி இலக்கம் 12 பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினுள் குறித்த ஆண்டிற்கு நாளாதுவரையாக்கிய நிறுவனங்களின் நிறுவன கட்டமைப்பு, அங்கீகார ஆளணி மற்றும் தற்போது கடமையில் ஈடுபட்டுள்ள ஆளணி தொடர்பான விபரங்கள், வருடாந்த செயல் நடவடிக்கைகளிற்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் மற்றும் திட்டமிட்டுள்ள பிரதான அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் உள்ளடங்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்காக மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 03 பந்தியின் வழிகாட்டி இலக்கம் 12 பிரகாரம் உள்ளடங்க வேண்டிய நிறுவன கட்டமைப்பு, அங்கீகார மற்றும் தற்போது கடமையில் ஈடுபட்டுள்ள ஆளணி, வருடாந்த கட்டுநிதி தேவைப்பாடு தொடர்பான விபரம் மற்றும் பெறுகைகள் திட்டம் சமர்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திணைக்களத்தின் 12 பிரிவுகளிற்காக 7700 வழக்குகள் விசாரணைக்கு உட்படுத்தி பகுப்பாய்வு அறிக்கை வெளியிட எஞ்சியிருந்ததுடன், 2022 ஆண்டினுள் மேலும் 45245 வழக்குகள் கிடைத்திருந்தன. அவற்றில் 2022 ஆண்டினுள் அறிக்கையிடப்பட்ட வழக்கு எண்ணிக்கை 40756 ஆவதுடன், ஆண்டிறுதியில் பகுப்பாய்வு செய்து அறிக்கை வெளியிட 12189 வழக்குகள் எஞ்சியிருந்தது. அது 2022 ஆண்டினுள் விசாரணைக்கு உட்படுத்தி பகுப்பாய்வு அறிக்கை வெளியிட இருந்த வழக்கு எண்ணிக்கையின் 23 சதவீதமானது. | 2022 ஆண்டினுள் கிடைத்த வழக்கு எண்ணிக்கை அதிகரித்தமை, ஆளணி வெற்றிடம், பொருளாதார பிரச்சினை போன்ற நாட்டில் நிலவிய பிரச்சினைக்குரிய நிலைமை காரணமாக இந் நிலைமை ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆளணி பிரச்சினையை விரைவில் தீர்த்துக் கொண்டு தாமதத்தை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 வெளிநாட்டு உதவித் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் கொரியாவின் சர்வதேச உதவி ஏஜன்சி (KOICA) ஊடாக திணைக்கள கொள்ளளவு விருத்திக்காக 4 மில்லியன் அமெரிகா டொலர் மானியமொன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தினால் KOICA கருத்திட்ட ஆலோசனை பிரகாரம் ரூபா 55 மில்லியன் தொகையை மீளாய்வாண்டில் இதற்காக மதிப்பிட்டிருந்த போதும், ரூபா 103,935 ஆன தொகையொன்று மாத்திரம் செலவாக மேற்கொளளப்பட்டிருந்தது. | இந்த ஏற்பாட்டு அளவு கருத்திட்ட கால எல்லையின் பிரகாரம் மேற்கொள்ளவுள்ள செலவுகளை கணக்கீடு செய்யும் எதிர்பார்ப்பில் கோரிய போதும், குறித்த கால எல்லையினுள் மேற்கொள்ள எதிர்பார்த்த பணிகளை மேற்கொள்ள முடியாது போனதால் அவ்வாண்டு இறுதியில் குறித்த கருத்திட்ட அலுவலகம் ரூபா 103,935 ஆன செலவொன்றை மாத்திரம் அறிவித்ததுடன், அதன் பிரகாரம் குறித்த செலவு விடயத்தின் கீழ் ரூபா 54,896,065 ஆன ஏற்பாடு எஞ்சியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு உதவியின் மீது கிடைக்கும் நிதி எதிர்பார்த்த பணிகளை மேற்கொள்வதற்காக செயற்திறனுடன் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும. |

KOICA கருத்திட்டத்தின் மூலம் மொத்த பெறுகைகள் செயற்பாடு மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் இந்த செலவுகளை மேற்கொண்ட காரணத்தை கணக்காய்விற்கு தெளிவாகவில்லை.

### 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2006 (4) (2) பிரிவு பிரகாரம் குறைந்த பட்சம் 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கும் பிரதான பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க வேண்டியதுடன், அதன் 4(2)(2) பந்தி பிரகாரம் பெறுகைகள் நடடிக்கைகள் ஆரம்பமாகும் சந்தர்ப்பம் முதல் முடிவடையும் வரை ஒவ்வொறு பெறுகைகள் பணிகளினதும் விபரங்களை காட்டும் வகையில் விரிவான பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும், திணைக்களத்தினால் விரிவான பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்துள்ள போதும் 03 ஆண்டுகளிற்கான பெறுகைகள் திட்டமொன்றை தற்போது தயாரித்திருக்காததுடன், 2024 ஆண்டிற்காக தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும. |

### 3.5 சொத்துக்கள் மகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீதிமன்ற அமைச்சிற்கு சொந்தமான மூன்று வாகனங்கள் 2020 பெப்ரவரி மாதம் முதலும், அபிவிருத்தி நிதி திணைக்களத்திற்கு சொந்தமான ஒரு வாகனம் 2015 ஜுன் மாதம் முதலும், முறையான சுவீகரித்தல் | இந்த நான்கு வாகனங்களையும் முறையாக சுவீகரித்துக் கொள்ள அமைச்சுடன் தொடர்புபட்டு நடடிவ்கை எடுக்கப்பட்டு வருவதுடன், கடிதக் கோவை மற்றும் உரிய தகவல்களை தேடிக் கொள்ள தாமதித்த | திணைக்களத்திற்கு சொந்தமான வாகனத்தை விரைவில் சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| இன்றி கணக்காய்வு திகதிய 2023 மார்ச் 20 வரை திணைக்கள பாவனைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | காரணத்தால் இந் நடவடிக்கைகளை முடிவுறுத்த இயலாது போனதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். |
| (ஆ) 2017 ஜுன் 28 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் 7 பந்தி பிரகாரம் ஒவ்வொறு நிறுவனத்தினாலும் கொள்வனவு செய்யும் மற்றும் பராதீனம் செய்யும் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை குறித்த காலாண்டு முடிவில் கொம்ட்ரோல ஜனரால் அலுவலகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும், திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ரூபா 42,937,521 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் மற்றும் ஆண்டினுள் பராதீனம் செய்த ரூபா 5,997,633 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் தொடர்பான தகவல்களை சமர்ப்பித்திருக்கவில்லை. | திணைக்கள சொத்துக்கள் தொடர்பான அறிக்கை சமர்பிக்கும் போது காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பான விபரங்களை மாத்திரம் சமர்பித்ததுடன், இயந்திர உபகரணங்கள் தொடர்பான விபரங்களுடன் பூரண அறிக்கையொன்றை 2023 ஆண்டு முதல் சமரப்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அரச அலுவலர்கள் பிணை வைப்பது தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் திருத்திய நிதிப் பிரமாணம் 880 பிரகாரம் அரச அலுவலர்களிற்கு பிணை வைப்பது தொடர்பாக அரச நிதி ஆகியவற்றின் கணக்களி பொறுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பு கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு உரியதாக காணப்படுவதால் குறித்த அலுவலர்களினால் பிணை | திணைக்களத்தின் பிணை வைக்க வேண்டிய அலுவலர்களின பிணை வைப்பு நடவடிக்கைகளை 2023 ஆண்டினுள் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் பிணை வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்படுவதனை பொறுப்பேற்க வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், நிதிப் பிரமாணம் 315 இல் பிணை வைக்க வேண்டிய கணக்காளர், காசாளர் மற்றும் களஞ்சிய பொறுப்பாளர் போன்ற பதவி வகிக்கும் அலுவலர்கள் குறித்த பிணை பணத்தை வைப்புச் செய்திருக்கவில்லை. | | |

## 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022/2023 கல்வி ஆண்டிற்காக 2021 செப்டம்பர் மாதம் வெளிநாடு சென்ற சிரேஷ்ட உதவி இரசாயன பரிசோதகர் ஒருவர் அந்த நாட்டில் சுகயீனமுற்ற காரணத்தால் 2022 ஒக்டோபர் மாதம் மீண்டும் இலங்கைக்கு வந்திருந்ததுடன், அந்த அலுவலரிற்கு பாடநெறி கட்டணம் உள்ளடங்களாக ஏனைய செலவிற்காக செலவிடப்பட்ட ரூபா 6,281,948 ஆன தொகை திணைக்களத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | நோய் நிலைமை காரணமாக இந்த அலுவலரிற்கு மீண்டும் அந்த பாடநெறியை பயில்வதற்கு முடியாதென, இலங்கைக்கு வந்து 03 மாத காலமாக மருந்து எடுத்த பின்னர் எமக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. குறித்த வெளிநாட்டு பல்கலைக்கழகத்திற்கு இது பற்றி அறிவித்ததுடன், அலுவலரின் பாடநெறி கட்டணத்தின் ஐம்பது சதவீதமாக செலுத்திய பவுன் 12,150 ஆன தொகையை மீள் பல்கலைக்கழகத்திலிருந்து திணைக்களத்திற்கு அறவிட தேவையான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத் தொகையும் கிடைத்த பின்னர் அரசிற்கு மேலதிக தொகை செலவாகியுள்ளதா என கணக்கிட்டு நீதிமன்ற அமைச்சிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பாடநெறிக்காக அரசிற்கு அறவிட வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சம்பளமற்ற விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற திணைக்களத்தின் மூன்று அலுவலர்கள் மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டு இருக்காததால் அம் மூன்று அலுவலர்களிடமிருந்தும் அறவிட வேண்டியதாக இருந்த ரூபா 2,945,922 ஆன மொத்த தண்டப் | இம் மூன்று அலுவலர்களும் சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்று சென்றுள்ளதால் பிணையாளர்களும் இல்லாததால் ரூபா 2,945,922 ஆன தண்டப் பணத்தை இதுவரை அறவிட முடியாதுள்ளதுடன், இது தொடர்பாக மதிப்பிற்குரிய சட்டமா அதிபரின் ஆலோசனையை | ஒப்பந்த பிரகாரம் அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணத்தையும் அறவிட இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற்றக் கொள்ள எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற்று 2019/2020 ஆண்டில் பட்டதாரி பாடநெறியொன்றை பயில்வதற்கு வெளிநாடு சென்ற உதவி இரசாயன பரிசோதகர் ஒருவர் மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டு இருக்காததால் பாடநெறி கட்டணம் மற்றும் ஏனைய செலவிற்காக அந்த அலுவலரிற்கு திணைக்களத்தினால் மேற்கொண்ட ரூபா 9,270,726 ஆன தொகையை அலுவலரிடமிருந்து அல்லது பிணையாளரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அலுவலர் சேவை தேவைப்பாட்டின் மீது ஒரு வருட பட்டப்பின் படிப்பு பாடநெறியை பின்பற்ற 2019 செப்டம்பர் 16 திகதி வெளிநாடு சென்றுள்ள போதும், 2020 செப்டம்பர் 17 திகதி மீண்டும் அவர் இந்த நாட்டிற்கு வராததுடன், அத் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் அவரிற்கு சேவையை வெறிதாக்கிய அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த பிரகாரம் அலுவலரிடம் இருந்து அறவிட வேண்டிய தொகையிலிருந்து தற்போது ரூபா 2,260,000 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகையை ரூபா 180,000 ஆன 41 தவணைகளில் செலுத்தி முடிவுறுத்துவதாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அவரினால் 2023 மார்ச் மாதம் முதல் மாதாந்தம் ரூபா 180,000 ஆன தொகையை திணைக்கள கணக்கிற்கு செலவு வைப்பதாக அறவித்திருந்தது. | கைச்சாத்திட்டுள்ள பிணைமுறி பிரகாரம் அத் தொகையை பிணையாளர்களிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4 நல்லாளுகை**

**4.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 06 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 05/2008 மற்றும் 2018 சனவரி 24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 05/2008(i) பிரகாரம் பிரசைகள்/ சேவை பெறுனர் பிரகடனத்தை தயாரித்து செயற்படுத்த வேண்டிய போதும், திணைக்களத்தினால் பிரசைகள்/ சேவை பெறுனர் பிரகடனத்தை தயாரித்திருக்கவில்லை. | திணைக்களத்தின் பிரிவின் பிரிவிற்கு வழங்கும் சேவைகள் ஒன்றுக் கொன்று அநேகமாக வித்தியாசமாவதால் பிரிவின் பிரிவிற்கு வெவ்வேறாக சேவைபெறுனர் பிரகடத்தை தயாரித்துள்ளதுடன், மொத்த திணைக்களத்திற்குமாக ஒரு சேவைபெறுனர் பிரகடனமொன்று தயாரிக்கப்படவில்லை. அதனை எதிர் காலத்தில் தயாரிக்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 (1) பிரிவின் பிரகாரம் ஒவ்வொறு நிறுவனத்திற்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிருக்க வேண்டிய போதும், திணைக்களத்திற்காக அவ்வாறான குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்படுவதால் திணைக்களத்திற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று இல்லையென சுட்டிக் காட்டுவதுடன், தற்போது அமைச்சினால் நடாத்தப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுடன் தொடர்பு பட்டு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு சட்ட பணிப்புகளிற்கு இணங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**5 மனிதவள முகாமைத்துவம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிறன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நிறுவன நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்ள உதவியான, தீர்மானம் எடுக்க தேவையான சிரேஷ்ட மட்டத்தின் 27 அலுவலர்கள் மற்றும் மூன்றாம் மட்டத்தின் 10 அலுவலர்களில் 9 அலுவலர்களின் பதவிகள் வெற்றிடமாக காணப்படுவதன் காரணமாக திணைக்களத்தின் நடவடிக்கைகளை சிறப்பாக கையாளுவதற்கு தடையாக இருந்தது. | சிரேஷ்ட மட்ட 3 பதவிகளிற்காக தற்போது அலுவலர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.<br><br>2 சிரேஷ்ட மட்ட பதவிகள், 4 மூன்றாம் மட்ட பதவிகள், 16 இரண்டாம் மட்ட பதவிகள் மற்றும் 16 ஆரம்ப மட்ட பதவிகளிற்கு ஆட்சேர்க்க பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>புதிய ஆட்சேர்ப்பின் ஊடாக பூரணப்படுத்த வேண்டிய சிரேஷ்ட மட்ட 25 பதவிகள் மற்றும் இரணடாம் மட்ட 10 பதவிகளிற்கு புதிதாக ஆட்சேர்ப்பதை இடைநிறுத்த அரசினால் எடுத்துள்ள கொள்கை ரீதியான தீர்மானத்தின் மீது பூரணப்படுத்த முடியாதுள்ளது.<br><br>மூன்றாம் மட்ட 05 பதவிகள் திணைக்கள மட்ட பதவிகளாவதுடன், தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள எவ்வித | நிறுவன நோக்கம் மற்றும் பணிகளை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்காக சிரேஷ்ட மட்ட பதவிகளிற்குரிய ஆளணியை ஆடசேர்க்க முன்னுரிமை வழங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இரசாயணகூட தொழிநுட்ப சேவை அலுவலரும் தகைமையை பூர்த்தி செய்யாததால், பூரணப்படுத்த முடியாதுள்ளது.<br><br>ஏனைய பதவிகளிற்காக பலநோக்கு செயளணி அபிவிருத்தி பயிற்சி அலுவலர்களை பெற்றுக் கொள்ள நீதிமன்ற, சிறைசாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு அமைச்சிடம் கோரியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2018 சனவரி 24 திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் நிறுவனத்தில் சேவையாற்றும் ஆளணிக்காக வருடாந்த செயலாற்று ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருக்காததுடன், மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றையும் தயாரித்திருக்கவில்லை. அவ்வாறே ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒரு வருடத்திற்கு 12 மணித்தியாலங்களிற்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பமொன்றை மனிதவள திட்டத்தினுள் உறுதியாக வேண்டிய போதும், அவ்வாறான பயிற்சித் திட்டமொன்றை செயற்படுத்த திட்டமிட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் பொ.நி.சு 02/2018 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க பொறுப்பேற்க வேண்டும். |